2012 மே 16]

வசதியிலே போதுமானவை. எனவே, தனியே மகளிர் பேருந்து இயக்க வேண்டியதில்லை.

226—

பேருந்து வசதி

வினா எண் 1945—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து பனிக்கனேந்தல், அரசனேந்தல், புக்குளம், வேதியரேந்தல் வழியாக செய்கோட்டை வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேதியரேந்தலுக்கும், செய்கோட்டைக்கும் இடையில் பாலம் பழுதடைந்துள்ளதால் மானாமதுரையிலிருந்து பனிக்கனேந்தல், அரசனேந்தல், புக்குளம், வேதியரேந்தல் வழியாக செய்கோட்டைக்கு தற்போது பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

227—

பேருந்து வசதி

வினா எண் 1946—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, தெ. புதுக்கோட்டை, எமனேஸ்வரம், பாண்டியூர், பொட்டகவயல், இராமநாதபுரம், மண்டபம் வழியாக இராமேஸ்வரம் வரை புதியப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து தே. புதுக்கோட்டை வழியாக பரமக்குடி வரைக்கும், பரமக்குடியிலிருந்து எமனேஸ்வரம், பாண்டியூர், பொட்டகவயல் வழியாக இராமநாதபுரம் வரைக்கும், இராமநாதபுரத்திலிருந்து மண்டபம் வழியாக இராமேஸ்வரம் வரைக்கும் பகுதி பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

228—

பேருந்து வசதி

வினா எண் 1947—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை ஆரப்பாளையம் பேருந்து நிலையத்திலிருந்து மானாமதுரை புதிய பேருந்து நிலையம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை ஆரப்பாளையம் பேருந்து நிலையத்திலிருந்து மானாமதுரை புதிய பேருந்து நிலையம் வழியாக பரமக்குடி மற்றும் இராமேஸ்வரத்திற்கு நாள் ஒன்றுக்கு அரசுப் பேருந்துகள்மூலம் 76 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய தேவைக்கு இதுவே போதுமானதாகும்.

229—

பேருந்து வசதி

வினா எண் 1949—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2012 மே 16]

(அ) மதுரையிலிருந்து மானாமதுரை, தெ. புதுக்கோட்டை, குதிரி, முனைவென்றி, இளையான்குடி வழியாக சாலைக்கிராமம் வரை புறநகர்ப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து தெ. புதுக்கோட்டைக்கு அரசுப் பேருந்துகளால் 24 தனி நடைகளும், தனியார் பேருந்துகளால் 8 தனி நடைகளும் மொத்தம் நாள் ஒன்றுக்கு 32 தனி நடைகளும், பரமக்குடியிலிருந்து முனைவென்றிக்கு 22 தனி நடைகளும், பரமக்குடியிலிருந்து இளையான்குடிக்கு 40 தனி நடைகளும், இளையான்குடியிலிருந்து சாலைக் கிராமத்திற்கு தனியார் பேருந்து மற்றும் அரசுப் பேருந்துகளால் 38 தனி நடைகளும் என பகுதி, பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி, வழித்தடம் புதிய வழித்தடமாக இருப்பதால் தேவையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து பேருந்து இயக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

230—

பேருந்து வசதி

வினா எண் 1067—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் பேருந்து நிலையத்திலிருந்து சித்தர்கோவில் மற்றும் எாம்பிள்ளை பகுதிகளுக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து சித்தர்கோவில், எாம்பிள்ளை வழித்தடத்தின் நீளம் 20 கி.மீ. இவ்வழித்தடத்தில்